பக்கங்கள் – 12
விலை – ரூ 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 186
வியாழக்கிழமை
30 மே 2024
வைகாசி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எந்தக்காலத்திலையும் எங்கட இனத்தில கோடரிக்காம்புகளுக்கு பஞ்சம் வந்ததில்லை பாருங்கோ"

## தமிழ் மக்களின் காணிகளை
# கடற்படை முகாமுக்காக சுவீகரிக்கக் கடும் முயற்சி
## சுழிபுரத்தில் இன்று எதிர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 30

சுழிபுரம் கிழக்கு, காட்டுப்புலத்தில் உள்ள கடற்படை முகாமுக்காக பொதுமக்களின் காணிகளைக் கையகப்படுத்துவதற்கான அளவீட்டு நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், இந்த நடவடிக்கைக்கு பிரதேச மக்களும், காணி உரிமையாளர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். காணி கையகப்படுத்தும் முயற்சியைத் தடுப்பதற்கு அனைவரும் இன்று திரளவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

11

## சம்பத்நுவர பாடசாலைக்கு ஒதுக்கிய நிதி திரும்பியது!
### விளக்கம் கோருகிறார் மாகாணக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 30

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமையால் மீள மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குத் திரும்பியுள்ளது. சம்பத்நுவர பாடசாலையின் உள்ளக வலையமைப்பை உருவாக்க வழங்கப்பட்ட நிதியே மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குத் திரும்பியுள்ளது.

11

## மண்காக்க திரளுங்கள்

யாழ்ப்பாணம், மே 30

சுழிபுரத்தில் கடற்படைக்குக் காணி சுவீகரிப்பதற்காக அளவீட்டுப் பணிகள் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறப்போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ்

11

## மின்சாரக் கட்டணம் குறையும் சாத்தியம்

கொழும்பு, மே 30

மின்சாரக் கட்டணம் 10 முதல் 20 சதவீதத்தால் குறைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று கூறப்படுகின்றது.

கொழும்பில் நேற்று ஊடக சந்திப்பு நடத்திய இலங்கை மின்சாரசபைப் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தனுஷ்க பராக்கிரமசிங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

11

## விகாரை அமைப்பதற்கு திலீபன் எம்.பி. நிதி!

வவுனியா, மே 30

வவுனியாவின் எல்லைப் பகுதியில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றக் கிராமங்களில் ஒன்றான நந்திமித்திரகம கிராமத்தில் விகாரை அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் நிதி ஒதுக்கியுள்ளார்.

அங்குள்ள விகாரையின் அபிவிருத்திப் பணிகளுக்காக 10 இலட்சம் நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் ஒதுக்கியுள்ளதுடன், அங்கு புதிதாக அமைக்கப்படவுள்ள

11

## உயர்தர பெறுபேறுகள் நாளை வெளியாகும்

யாழ்ப்பாணம், மே 30

2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நாளை வெள்ளிக்கிழமை வெளியிடப்படுமெனக் கல்வி

11

## அரசியல் பேசத் தடை!
### யாழ்.நூலக எரிப்புத் தொடர்பான ஆவணப்படத் திரையிடலுக்கு நிபந்தனை




யாழ்ப்பாணம், மே 30

யாழ். நூலக எரிப்பு பற்றிய ஆவணப்படத்திரையிடலின் போது, அங்கு அரசியல் பேச யாழ். மாநகரசபை நிர்வாகத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

11

## மாணவிகளிடம் துர்நடத்தை: ஆசிரியருக்குப் பணித்தடை

யாழ்ப்பாணம், மே 30

10 வயது மாணவிகளை துர்நடத்தைக்கு உட்படுத்தியதாக குற்றம்சுமத்தப்பட்டு கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஆசிரியருக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் பற்றிக் டிறஞ்சனால் பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

11

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

விரிவு :- பக். 11

## ரணிலின் முகவரே சுமந்திரன் எம்.பி.!
### கஜேந்திரன் எம்.பி. கடும் தாக்கு

யாழ்ப்பாணம், மே 30

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தமிழ்த் தேசியத்தின் தேசவிரோதி.

11

### இன்றும், நாளையும்
## கல்விச் செயற்பாடுகள் வழமைபோன்று நடக்கும்

யாழ்ப்பாணம், மே 30

இன்றும், நாளையும் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளிலும் கல்விச் செயற்பாடுகள் வழமை போன்று முன்னெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

11

## அரச நிறுவனங்களுக்குள் அத்துமீறினால் தண்டனை
### வடக்கு ஆளுநர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், மே 30

அரச நிறுவனங்களுக்குள் அத்துமீறி நுழைவதுதண்டனைக்குரிய குற்றமாகும். கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர் வணிகர் கழகம் ஆதரவு

**யாழ்ப்பாணம், மே 30**

**தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தொடர்ச்சியான மக்கள், சமூக அமைப்புகளுடனான உரையாடலின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணம் வணிகர் கழகத்துக்கும் இன்னும் சில சிவில் அமைப்புகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.**

பொதுவேட்பாளர் விடயத்தில் தொடர்ச்சியான செயற்பாட்டில் இருக்கும் சமூக (சிவில்) அமைப்புகளின் கூட்டிணைவு சார்பாக பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளும், யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட்ட இன்னும் சில உறுப்பினர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே பொதுவேட்பாளரின் அவசியத்தை முன்னிறுத்தி அது விரைவாகவும், வீரியமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டை வர்த்தக சங்கத்தினர் முன்வைத்திருக்கின்றனர். வணிகர் சங்கத்தின் இந்தக் கோரிக்கையானது பொதுவேட்பாளர் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியிலும், சமூக நிறுவனங்கள் மத்தியிலும் தன்னியல்பாக தோன்றியுள்ளமையின் வெளிப்பாடு என சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (ம-125)

## வெளிநாட்டு ஆசைகாட்டிய 3 மோசடியாளர்கள் கைது

கொழும்பு, மே 30

ரஷ்யாவுக்கு அனுப்புவதாகக் கூறி 140 பேரை ஏமாற்றிப் பணம் பெற்ற மூவர் மொரட்டுவ தலைமையக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் சாரதிப் பயிற்சி நிலையத்தை நடத்துபவர் என்றும் இந்த நிலையத்தைச் சோதனையிட்டபோது வெவ்வேறு நபர்களின் 39 கடவுச்சீட்டுகள் மற்றும் போலி ஆவணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தேகநபர்கள், ஒருவரிடமிருந்து 6 இலட்சம் ரூபா முதல் 14 இலட்சம் ரூபா வரை பணம் பெற்றுள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## வேலைவாய்ப்பு மோசடி மக்களே உஷார்!

கொழும்பு, மே 30

வெளிநாடுகளில் ஏராளமான வேலைவாய்ப்புகள் இருப்பதாக சமூக வலைத்தளங்களினூடாக விளம்பரம் செய்து ஏமாற்றி வரும் மோசடி குறித்து மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

இந்தப் போலி விளம்பரத்தில், நோயாளிகளை பராமரிக்கும் பணியாளர்கள், செவிலியர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள், பாதுகாவலர்கள், கட்டுமான தொழிலாளர்கள் பணியிடங்கள் வெற்றிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுவதுடன் மாதச் சம்பளம் மூன்று இலட்சம் ரூபா என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான தொழில்வாய்ப்புகள் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் கிடைக்கவில்லை. எனவே மோசடியாளர்களிடம் சிக்கி பணத்தை இழக்கவேண்டாம் என்றும் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## சீரற்ற காலநிலை பாதிப்பு அரசாங்கம் நிவாரணம்

கொழும்பு, மே 30

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு இடர் முகாமைத்துவ நிலையம் முன்னெடுப்புகளை ஆரம்பித்துள்ளது. சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 45 ஆயிரத்து 239 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## தேர்தலைப் பிற்போட ஒத்துழைப்பில்லை!

*பிரதான கட்சிகள் நிராகரிப்பு*

கொழும்பு, மே 30


ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பவற்றை குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்காவது ஒத்திவைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள கோரிக்கையை பிரதான அரசியல் கட்சிகள் அடியோடு நிராகரித்துள்ளன.

ஜனநாயகத்துக்கு விரோதமாக அமைந்துள்ள இந்த யோசனைக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது எனவும் மேற்படி கட்சிகள் அறிவித்துள்ளன.

ஆளுங்கூட்டணியின் பங்காளியான பொதுஜன பெரமுன, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பனவே ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் ஒத்திவைப்புக் கோரிக்கையை நிராகரித்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு இடமளிக்கப் போவதும் இல்லை. ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது. தோல்வி பீதியாலேயே ஜனாதிபதித் தரப்பு குறுக்கு வழியில் முயற்சிகளை முன்னெடுக்கின்றது - எனவும் மேற்படி கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. (ம-44)

## இலங்கையில் முதல் ஸ்ரோபெரி கிராமம்



இலங்கையின் முதலாவது ஸ்ரோபெரிச் செய்கை முன்மாதிரிக் கிராமம் நுவரெலியாவில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவிலுள்ள 4 கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு கோடி ரூபா செலவில் 50 விவசாயிகளைப் பயன்படுத்தி இந்த ஸ்ரோபெரி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்ரோபெரி செய்கைக்கு அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஸ்ரோபெரி செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ச-இ)

## ஐ.எஸ்.ஐ.எஸ். விவகாரம்: குஜராத் குழு இலங்கைக்கு

கொழும்பு, மே 30

குஜராத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக குஜராத்தின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் இலங்கையர் நால்வரும் இந்தியாவில் தற்கொலைத் தாக்குதலை நடத்துவதற்குத் தயார் நிலையில் இருந்தனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விடயம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதில் குஜராத் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் மூன்று குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையிலேயே அதில் ஒரு குழு இலங்கைக்கு வருகை தந்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# வர்த்தக முதலீடுகள் ஈர்ப்பு நாட்டுக்கு நன்மை தரும்

*ருவான் சுட்டிக்காட்டு*

கொழும்பு, மே 30

டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைவர் எலான் மஸ்க் போன்ற உலகப் புகழ்பெற்ற வர்த்தகர்களின் முதலீடுகளை ஈர்க்க முடிந்தால் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாக அமையும்.

இவ்வாறு காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

'ஸ்டார் லிங்' செயற்றிட்டத்தை இலங்கையில் ஆரம்பிப்பதன் மூலம் இலங்கை முழு உலகுக்கும் திறக்கப்பட்டுள்ளது. உலகின் கோடீஸ்வர வர்த்தகர்கள் இந்த நாட்டுக்கு வருவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

இந்தத் திட்டத்தில் இணைவதன் மூலம், நாட்டின் பின்[illegible] பிரதேசங்களுக்கு எந்த[illegible]லும் இன்றி இணைய வசதிகளை வழங்க முடியும். அது சுற்றுலாத் துறை உட்பட பொருளாதாரத்துக்குப் பயன்படும் பல துறைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வரும்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும் தடைகளை ஏற்படுத்துவதும், நாட்டின் வளர்ச்சிக்கும் [illegible] என்றும் அவர் [illegible]. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதிக்கான

# ரயில் தண்டவாளங்கள் சீரமைப்புப் பிற்போகும்!



**யாழ்ப்பாணம், மே 30**

**வடபகுதிக்கான ரயில் தண்டவாளங்களை சீரமைக்கும் பணிகள் ஒகஸ்ட் மாதமே பூர்த்தியாகும் என்று பெருந்தெருக்கள் போக்குவரத்துத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பொசன் பண்டிகைக்கு முன்னர் வடபகுதிக்கான ரயில் பாதைகளைச் சீரமைக்கும் பணிகள் முழு மைப் படுத்தப்படுமா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கே, ஒகஸ்ட் மாதமே பணிகள் முழுமை பெறும் என்று போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். பொசன் பண்டிகையை முன்னிட்டு வடபகுதிக்கு விசேட அரச, தனியார் பேருந்து சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-6)

யாழ்ப்பாணம் போதனாவில்

# 'ஓ பொசிட்டிவ்' வகையின் சிறுதட்டுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவில் 'ஓ பொசிட்டிவ்' வகை குருதிக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது என்று போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஓ பொசிட்டிவ் குருதி வகை உடையவர்கள் குருதித்தானம் செய்வதன் மூலம் இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தித்துக் கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-66)

# மாணவி கர்ப்பம்; கடைக்காரர் கைது

முல்லைத்தீவு, மே 30

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வயதுடைய பாடசாலை மாணவி கர்ப்பம் தரித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கடை உரிமையாளர் ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை முள்ளியவளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மாணவி நாள்தோறும் குறித்த கடைக்குச் சென்று வந்துள்ள நிலையில் உடல் சுகவீனம் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்போது சிறுமி கர்ப்பமாக இருப்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து கடைக்காரர் சந்தேகத்தின் பேரில் முள்ளியவளைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஒ-25-19)

# இவ்வருடத்தில் இதுவரை 24,645 டெங்கு நோயாளர்கள்

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 24 ஆயிரத்து 645 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலிருந்து 5ஆயிரத்து 289 நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 2 ஆயிரத்து 309 நோயாளர்களும் மற்றும் களுத்துறை மாவட்டத்திலிருந்து ஆயிரத்து 307 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் அதிகரித்துள்ளது. பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்றும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

# ஐ.எஸ்.ஐ.எஸ்.தொடர்பு சகோதரர்கள் கைது!

குஜராத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறி கொழும்புப் பகுதியில் கைது செய்யப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு விசேட பொலிஸ் குழுவால் ஹலவத்தை பிரதேசத்தில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# புலிகள் காலத்திலேயே பெண்களுக்குப் பாதுகாப்பு!

## விக்னேஸ்வரன் எம்.பி. புகழாரம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் பெண்களுக்கு உச்சப் பாதுகாப்பு இருந்தது. நள்ளிரவிலும் பெண்கள் பாதுகாப்புடன் நடமாடும் சூழல் இருந்தது. இன்று எமது தமிழ்ச் சமுதாயத்தின் சீர்கேட்டினைத் தடுக்க ஓர் இரும்புக் கரம் தேவை என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் வடக்கின் முதலமைச்சராக இருந்திருந்தால் பாடசாலை மாணவிகளுக்கு எதிராக இன்று மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு கடும் நடவடிக்கை எடுத்திருப்பேன். வடக்கு மாகாணத்தில் இன்று இவ்வாறான சீர்கேடுகள் இடம்பெறுவது வெட்கித் தலைகுனியும்படியான விடயமாகவே இருக்கின்றது. ஏனெனில் தமிழ் மக்கள் ஒழுக்கமான இனமாக இருந்தவர்கள். அவ்வாறே கருதப்பட்டவர்கள். ஒரு பெண் நள்ளிரவில் நகைகளை அணிந்துகொண்டு எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சென்றுவரக்கூடிய நிலை என்று தோற்றம் பெறுகின்றதோ அன்றுதான் எமக்குச் சுதந்திரம் என்று மகாத்மா காந்தி சொன்னார். கிட்டத்தட்ட அவ்வாறான நிலைதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் இருந்தது. இப்பொழுது அனைத்தும் மாறிவிட்டது. இன்று போதை தலைவிரித்தாடுகின்றது. இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார், வான்படையினர் வடக்கில் முகாமிட்டிருந்தும் போதைப்பொருள்கள் எந்தத் தடையும் இல்லாமல் ஊடுருவிக் கொண்டிருக்கின்றன.

சீர்கெட்டுப்போயுள்ள இந்த சமுகத்தை மீட்பதற்கு இரும்புக்கரம் தேவை - என்றார். (ம-125)

# புதினம் தெரியுமோ?

**பூனைக்கு விளையாட்டாம் , சுண்டெலிக்கெல்லோ சீவன் போகுது எண்ட கணக்கா யாழ்ப்பாணத்துக் கச்சேரியில ஒரு சம்பவம் நடந்திருக்குது. போனகிழமை ரணில் யாழ்ப்பாணம் வந்து சுத்திப் பார்த்திட்டுப் போனவரெல்லோ. அப்பிடி வந்த ரணில், கொஞ்சப்பேருக்கு காணி உறுதி குடுத்தவர் . அந்த நிகழ்வுக்கு வந்த ஆக்களுக்கு பற்றிஸ், பால் பைக்கற், ஒரு துண்டு கேக் எல்லாம் ஒரு 'பொக்ஸுக்குள்ள' வைச்சுக் குடுத்தவை. அப்பிடி சனத்துக்கு இந்தச் சிற்றுண்டி 'பொக்ஸ்' குடுக்கிறதுக்கு கச்சேரிக்காரர்தான் பொறுப்பு. சனத்துக்கு குடுத்த பொக்ஸில இருந்து அதுக்குள்ள வைச்ச பற்றிஸ், பால் பைக்கற், சமோசா,கேக் எண்டு எல்லாத்தையும் கச்சேரியில இப்ப மேல்மட்டத்தில இருக்கிறவர் தான் 'எங்கேயோ' ஓர்டர் பண்ணி எடுத்தவராம். அந்தப் பலகாரங்களும், பால்பைக்கற்றும் எங்க வாங்கினவை, என்ன விலைக்கு வாங்கினவை எண்டெல்லாம் அந்த மேல்மட்டத்தில இருக்கிறவருக்குத்தான் வெளிச்சம். இப்ப விசயம் அதில்லை.**

**இப்பிடி காணி உறுதி குடுக்கிற நிகழ்வுக்கு முதல்நாள் , கச்சேரியில எல்லா பிரதேச செயலர்மாரையும் கூப்பிட்டு ஒரு முன்னாயத்தக் கூட்டம் நடந்தது. எண்டைக்கும் இல்லாத புதினமா அண்டைக்கு அவைக்கும் பொக்ஸுக்குள்ள உந்த பலகாரங்களும், பால் பைக்கற்றும் வைச்சுக் குடுத்திருக்கினம். பிரதேச செயலர்மாரும் வலுபுளுகமா அதைச் சாப்பிட்டபடி , ரணிலின்ர கூட்டத்துக்கு என்னென்ன முன்னாயத்த வேலையள் செய்தம் எண்டு சொல்லத் தொடங்கிச்சினமாம். அப்ப கச்சேரியில மேல்மட்டத்தில இருக்கிறவர் 'எல்லாரும் சோர்ட் ஈட்ஸ் (சிற்றுண்டி) சாப்பிட்டிட்டியளோ?' எண்டு கேட்டிருக்கிறார். பிரதேச செயலர் மாரும் ஓமெண்டு தலையாட்ட, அதுக்குப் பிறகு கச்சேரி மேல்மட்டக்காரர் 'நாளைக்கு ரணிலின்ர கூட்டத்துக்கு வாறவைக்கு உந்த பலகார பொக்ஸ்தான் குடுக்கப் போறம், அதுதான் இப்ப உங்களில ரெஸ்ட் பண்ணிப் பாத்தம். இதைச் சாப்பிட்டு நாளைக்கு வரைக்கும் நீங்கள் எல்லாரும் உயிரோட இருந்தால் சனத்துக்குப் பயப்பிடாமல் குடுக்கலாம்' எண்டு பகிடியாச் சொல்லியிருக்கிறார். கூட்டத்துக்குப் போனவை 'அப்ப நாங்கள் என்ன பரிசோதனை எலியளோ?' எண்ட மாதிரி ஆளையாள் முழுசினபடி பார்த்திட்டு வந்திருக்கினம்.**

**இப்பிடி சனத்துக்கு குடுக்கிற பலகார பொக்ஸை , முதல்நாளே குடுத்து சாப்பிடச்சொல்லிப் பார்த்திட்டு சனத்திட்ட குடுக்கிறது நல்லதுதான். சிலவேளை அதில இருந்த சமோசாவோ, பற்றிஸோ, கேக்கோ சரியில்லாமல் இருந்திதிருந்தா அதை நிப்பாட்டிப் போட்டு நல்லதா வேற ஏதும் வாங்கி சனத்துக்கு குடுக்கத்தான் கச்சேரி மேல்மட்டக்காரர் இப்பிடிச் செய்திருப்பார் எண்டு நம்பலாம். ஆனால் உந்தப் பலகாரத்தில காட்டின அக்கறையை, கிட்டடியில சனத்துக்கு குடுத்த பத்துக்கிலோ அரிசிப்பையிலையும் காட்டியிருக்கலாமே எண்டதுதான் எல்லாரின்ர கேள்வியும். சும்மாவே , 'சாம்பிள்' பார்த்துத்தான் எல்லாச் சாமான்களும் வாங்க வேணும். ஆனால் அப்பிடி ஒண்டும் பாக்காமல், கண்ணை மூடிக்கொண்டு ஒரு கொம்பனியிட்ட வாங்கின குத்தரிசி, சிவப்பு நிறத்தில வேகாமல் பானையோட சண்டை பிடிச்சதால, கன சனங்கள் அந்த அரிசியைக் கோழிக்குத்தான் போட்டதுகள். வீட்டில உள்ளவை பசியில, கோழியளோ விருந்தில. அப்பிடி கோழியளுக்கு அரிசி வழங்கிய வள்ளல், இப்ப என்னடாவெண்டால் அடுத்தநாள் புரோக்கிராமில குடுக்கிற பலகார பொக்ஸை முதல் நாளே டீ.,எஸ்.மாருக்கு குடுத்து ஒத்திகை பாக்கிறார்.**


**சிலவேளை உதிலயும் ஏதும் வெட்டுக்கொத்துகள் இருக்கோ தெரியேலை. சொன்னாப்போல ஒரு கொசுறுத் தகவல். உந்த கச்சேரி மேல்மட்டத்தாருக்கு சாப்பாடுகள் விக்கிற மூண்டு வாகனம் ரவுண் ஏரியாவுக்குள்ள ஓடித் திரியுதாம். கூட்டிக்கழிச்சுப் பாக்க கணக்குச் சரியா வருகுதோ?**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு
04.10.1940

இறப்பு
27.05.2024

### தெய்வேந்திரம் கண்மணி (திலகம்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் 211/21, கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் கண்மணி (திலகம்) கடந்த (27.05.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்கண்டன் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்து - தெய்வானை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வள்ளிக்கொடி, காலஞ்சென்ற சோதியம்மா, சுந்தரலிங்கம் (சுந்தா), அதியவனிதா, காலஞ்சென்ற மனோறஞ்சிதராசா (குட்டி ராசா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சோதிஅம்மா, கனகம்மா ஆகியோரின் மைத்துனியும், தர்மராஜா (ரவி - நெதர்லாந்து), தனபாலசிங்கம் (பாலா - வவுனியா), புவனராஜா (சிறி - யாழ்ப்பாணம்), பூபாலசிங்கம் (லுக்கி - லண்டன்), பேரின்பராணி (ராதா - கனடா), ஜெயராஜசேகரம் (ஜெயம் - இந்தியா), அமுதா (தங்கன் - யாழ்ப்பாணம்), குகேந்திரராஜா), ராசன் - (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாளனி, யேசுமலர், மஞ்சுளா, சுபத்திராதேவி (கலா), அருமை, காலஞ்சென்ற ஜோர்ஜ்வொசிங்டன், குமுதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், எஸ்தர் - ரஜித், கமலரூபன், லியோன்ரூபன், திஸ்வன்யா, கௌசிகா, ரவிஷாந், றேனுஷன், நிவேக்கா, சுஜிக்கா, கோபி, மயூறி, பானு, ஜெயசூர்யா, ஸ்ரீராம், ஸோபிகா - பிரவீன், டெனுசன், டரணிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், எலியாஸ், பபிஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 377 3050

(CS 612) A-1

## 31 ஆம் நாள் நினைவு நாள்

மலர்வு
24.01.1937



உதிர்வு
29.04.2024

### செல்லத்துரை இராசலட்சுமி மயில்வாகனம்

திதி: 30.05.2024 வியாழக்கிழமை

கண்களை மூடி பார்த்தாலும், கண்களை
திறந்தாலும், கனவிலும்..
என் அன்னையே.. அவள் எப்போதும் நினைப்பது
என்னையே..! தூக்கத்தில் உன்னைப் பற்றி
நினைப்பவள் காதலி.. தூங்காமல் கூட உன்னையே
நினைப்பவள் தாய்.! தமிழில் அம்மா என்ற சொல்
எப்படி வந்தது என்று தெரியாது..
ஆனால் அன்பு என்ற சொல்
நிச்சயம் அம்மாவில் இருந்துதான் வந்திருக்கும்.
என்னை நடக்க வைத்து பார்க்க வேண்டும் என்ற ஆசையை
விட, நான் விழுந்து விடக்கூடாது என்ற கவனத்தில் தான் இருந்தது
உன் தாய் பாசம்.

**பிரிவால் வாடும்**

கணவர் மயில்வாகனம்,
மகள் சறோஜினிதேவி ஆனந்தராசா குடும்பம், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மகள் புஸ்பராணி விக்னேஸ்வரன் குடும்பம், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மகன் வற்சலன் பிள்ளைகள்.
மகன் மகேந்திரன் சிவா மனைவி விஜி குடும்பம், பேரப்பிள்ளை.
தம்பி சிவசுப்பிரமணியம் (மணியம்) மனைவி சந்தானலட்சுமி குடும்பம் (கனடா)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தம்பி செல்வநாயகம் செல்வம் குடும்பம், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தம்பி நாகரசா குடும்பம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தம்பி சண்முகலிங்கம் குடும்பம், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சுஜெந்தி குடும்பம், பிள்ளைகள், ராஜி அக்கா குடும்பம்.
கல்யாணி பிள்ளைகள் கல்யாணி குடும்பம், மணி அக்கா குடும்பம், சம்பந்தர் குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அம்மாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம்

தொடர்புகளுக்கு:
சிவா - கொழும்பு - 00966 55 218 12 10
தேவி - சுதுமலை - 077 45159 76
ராணி - திருகோணமலை - 075 756 33 79
செல்வம் செந்தில் குமார் திபா - பனை - 077 66 42 173
நாகராசா சுதுமலை - 077 972 4167
சண்முகலிங்கம் - மட்டக்களப்பு - 071 513 8870
சந்தன லக்ஷ்மி மோகன் இசன் சுதன் பாபா - கனடா - 001 416 845 35 33
ரூபி கனடா, ராஜி - சுவிஸ் 0041 76 515 65 48
வற்சலன் (மகன் )
0033 753 7420 21
0033 760 1910 35

குடும்பதினர்
கணவர் - மயில்வாகனம்
மகன் - வற்சலன்




# கொள்கைக்காக பொதுவேட்பாளரை தமிழர்கள் களமிறக்கவேண்டும்

## கூறுகிறார் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, மே 30

எமது இனத்துக்கு நடந்த அநீதிக்கு நீதியைக் கோருவதற்கு அதை தெளிவாகச் சொல்வதற்கு பொது வேட்பாளரை கொள்கைக்காக நாம் களம் இறக்க வேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அவர் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கு நடந்த அடாவடியை மறந்து இராணுவத்தினரும் அவர்களது ஒட்டுக்குழுக்களும் வழங்கிய தன்சலவில் மக்கள் வரிசையில் நின்றதைப்பார்க்கும்போது எமது இனத்துக்கு இதுவும் ஒரு சாபக்கேடு என வேதனைப் படவேண்டியிருக்கின்றது. நாம் போராடுகின்ற இனமாக இருந்தால் சில விடயங்களை எதிர்க்க வேண்டும் - என்றார்.

மேலும், தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சிக்குள் இரு நிலைப்பாடுகள் உள்ளன. தேர்தல் அறிவிக்கப் பட்டதும் முடிவு எடுப்போம். - என்றார்.

இதேவேளை, ஜனாதிபதியின் வடக்குப் பயணத்தில் பங்கேற்காமை தொடர்பில் விளக்கிய நாடாளுமன்ற உறுப்பினர், கிளிநொச்சி மருத்துவமனையில் தற்போது திறந்து வைக்கப்பட்ட கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் நான் கலந்து கொண்டேன். அந்த ஒளிப்படத்தை வைத்து பல அரசியல் கட்சிகள் தமது இயலாமையை வெளிப்படுத்தியிருந்தன. தேர்தல் பரப்புரைக்காக ஜனாதிபதி ரணில் வடக்குக்கு வந்ததாக குற்றச் சாட்டும் உண்டு. அதனால் பங்கேற்கவில்லை- என்றார்.

(ஓ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிங்களத் தலைவர்களின் தப்புத்தாளங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வடக்குப் பயணத்தின்போது முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனின் வீடு தேடிச் சென்று சந்தித்திருந்தார். இதன்போது பல விடயங்கள் பேசப்பட்டிருந்தன. முக்கியமான விடயத்தை விக்னேஸ்வரன், சந்திப்பு முடிந்த பின்னரான ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். அரசியல் ரீதியான விடயங்களைத்தான் முன்வைத்தபோது அதைத் திசைதிருப்பி பொருளாதார விடயங்களைப்பற்றியே ரணில் பேசினார். '40 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் உரிமை, அரசியல் தொடர்பில் பேசுகின்றார்கள். இளையோர்கள் எல்லோரும் வேலை வாய்ப்பை பற்றித்தான் கதைக்கின்றார்கள்' என ரணில் தன்னிடம் சொன்னதாக விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார். தமிழ் இளையோரை குறிவைத்து தனது வடக்குப் பயணத்தின்போது தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் ஊடாக சந்திப்புகளை ரணில் நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பில் அவர் பேசியது முழுவதும் பொருளாதார மறுசீரமைப்புத்தான். இளையோரின் வேலைவாய்ப்புப்பற்றித்தான் அதிகம் பேசினார். வடக்கிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி எப்படி பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்பதைத்தான் சொன்னார். அவரது எண்ண ஓட்டத்தில் இளையோர் மத்தியில் உரிமைக்கான போராட்ட உணர்வு இல்லை என்பதைப் புரிந்துகொண்டுதான் அதற்கேற்ற வகையில் காய் நகர்த்தினார்.

இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரமல்ல இந்த நாட்டின் சிங்களத்தலைவர்கள் எல்லோர் மத்தியிலும் புதைந்துள்ள எண்ணப்பாடுதான். அவர்களைப் பொறுத்தவரையில் அடுத்த தலைமுறை உரிமைக்காக போராடாது. அவர்கள் வேலைவாய்ப்புக்காக மாத்திரமே போராடுவார்கள். பொருளாதாரரீதியான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றுதான் கணக்குப்போடுகின்றார்கள். இதில் சஜித்தோ, அநுரவோ விதிவிலக்கல்ல. அவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பரப்புரை அடிநாதமாக பொருளாதார மறுசீரமைப்பையே முன்வைத்துள்ளனர். பொருளாதார மறுசீரமைப்புத் தொடர்பிலேயே சஜித்தும், அநுரவும் விவாதம் நடத்தவும் இருக்கின்றனர். சிங்களத் தலைவர்கள், நாட்டின் பொருளாதார மேம்பாடு அல்லது நாடு வங்குரோத்தானதுக்கு யார் காரணம் என்ற அரசியல் நோக்குநிலைக்குள்ளேயே நிற்பதற்கு விரும்புகின்றனர். அதை முன்வைப்பதுதான் தங்கள் தேர்தல் வெற்றி என்று நினைக்கின்றனர்.

ஆனால், இந்த நாட்டின் பொருளாதாரம் இன்னமும் நிமிரமுடியாமல் இருப்பதற்கு தீராத இனப்பிரச்சினைதான் அடிநாதம் என்பதை அவர்கள் இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை. தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கி நாட்டின் பொருளாதாரத்தில் பங்காளிகளாக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணவில்லை. மாறாக குறுக்குவழியில் அடுத்த தலைமுறையின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்கின்ற அடிமுட்டாள் சிந்தனையிலேயே செயற்படுகின்றனர். இது நோய்க்கான தற்காலிக நிவாரணியே. நோயின் மூலக்கூறைக் கண்டறிந்து அதைத் தீர்ப்பதைவிடுத்து மேலோட்டமாக மருந்து கொடுப்பதால் நோய் தீர்ந்துவிடும் என நினைக்கக்கூடாது. ஆனால் சிங்களத் தலைவர்கள் தற்காலிகத் தீர்வைத் தந்துவிடும் நழுவல் போக்கையே இன்னும் தொடர்கிறார்கள். இப்படியான சூழலில்தான் தமிழர்களின் நிலைப்பாடுகளை தெளிவாக எடுத்தியம்பக்கூடியதாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலை மாற்றியமைக்கவேண்டும் என தமிழ் சிவில் சமூகம் விரும்புகின்றது. தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பவர், தமிழர்களின் அபிலாஷைகளின் அடையாளம். ஆனால் அதைக் குழப்பியடித்து, பொருளாதாரப் பிரச்சினை மாத்திரமே நாட்டில் இருக்கின்றது என்பதை முன்னிறுத்தும் சிங்களத் தலைவர்களை ஆதரிப்பதற்கும் தமிழ்த் தலைவர்களாக தங்களை அடையாளப்படுத்துவோர் இருக்கின்றனர். அவர்களை எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தங்கள் தலைவர்கள் என்ற தகுதிநிலையிலிருந்து தூக்கி எறியத்தான் போகின்றார்கள். காலம் அதனைக் கைகொட்டிச் சிரித்து ரசிக்கத்தான் போகின்றது.






# ஜனாதிபதித் தேர்தல் அரசு ஒத்திவைக்காது

## நிமால் லான்சா தெரிவிப்பு

**கொழும்பு, மே 30**

**அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் நடத்தப்படும். அதனை ஒத்திவைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சா தெரிவித்தார்.**

ஜனாதிபதி தேர்தல் குறித்த கால எல்லைக்குள் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார், ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலையோ இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைப்பதற்கான யோசனைகளை பல்வேறு தரப்பினர் சமர்ப்பிக்கலாம். அது அவர்களின் தனிப்பட்ட கருத்து அன்றி அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல. ஜனாதிபதித் தேர்தலை நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# தொழில் பணியாளர்களுக்கு சமூக பாதுகாப்பு நிவாரணம்

கொழும்பு, மே 30

பலதரப்பட்ட தொழில்துறைகளிலும் பணியாற்றும் 55 வயதை பூர்த்திசெய்த அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு நிவாரணம் வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்துக்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# தேர்தல்கள் ஒத்திவைப்பு ஆரோக்கியமானதல்ல!

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

தேர்தல் ஒத்திவைக்கப்படுகின்றமையானது ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமானதல்ல என்று ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். தனது எக்ஸ் தளப் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதியினதும், நாடாளுமன்றத்தினதும் காலத்தை நீடிப்பதானது, ஜனநாயக சமூகத்தின் அடிப்படை கொள்கையை பாதிக்கும். ஸ்த்திரதன்மையை மக்களின் விருப்பத்துக்கமைய ஏற்படுத்தப்படவேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# 'இன்புளுவன்சா' பரவும் அபாயம்

கொழும்பு, மே 30

நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக இன்புளுவன்சா காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நோய் அறிகுறிகள் தென்படுமாயின், உடனடியாக சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)



# கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, மே 30

ஏப்ரல் மாத இறுதிக்குள் இலங்கையின் மொத்த உத்தியோக பூர்வ கையிருப்பு 5.5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்குநிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சுமார் 8 வீதத்தால் வலுவடைந்துள்ளது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## நாளை

31.05.2024

**வெள்ளிக்கிழமை**

**வைகாசி - 18**

சுபநேரம் : 05.52 - 07.22

ராகுகாலம் : 10.22 - 11.52

## நாளொரு நல்வார்த்தை

**உலகில் சாகாவரம் பெற்றவை என்று ஒன்றைத்தான் சொல்லமுடியும் அவை புத்தகங்களே.**

**- கதே -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 30
எழுத்தாளரும், ஊடகவியலாளருமான அலெக்ஸ் பரந்தாமனின் 'கடலலைகளை மேவிய கதை' நாவல் அறிமுக நிகழ்வு கலாபூஷணம் ந. இராமநாதன் தலைமையில் விசுவமடுவில் அமைந்துள்ள மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் வரவேற்புரையைப் பேராதனைப் பல்கலைக்கழக மாணவி ஆர். பிரஷாந்தியும், வாழ்த்துரைகளை விசுவமடு வாணி மருத்துவ நிலைய மருத்துவர் ந. சிவசுப்பிரமணியமும், விசுவமடு திறன்விருத்தி நிலைய இணைப்பாளர் திருமதி றயூலா திருச்செல்வனும், நூல் அறிமுக உரையை புதுக்குடியிருப்புப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் ச. தனுஜனும், நூல் மதிப்பீட்டுரையை எழுத்தாளர் யோ. புரட்சியும், ஏற்புரையை நூலாசிரியர் அலெக்ஸ் பரந்தாமனும் ஆற்றவுள்ளனர்.
நிகழ்ச்சித் தொகுப்பை இளம் எழுத்தாளர் ச. வில்வரசன் மேற்கொள்ளவுள்ளார். விழாவில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்புவிடுக்கின்றனர். (ஓ-25)

# சிறார்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 30
தென்மராட்சி தெற்கு, கோவிலாக்கண்டி செல்வா முன்பள்ளி சிறார்களின் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தலும் வேடந்தாங்கல் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை முன்பள்ளியில் இடம்பெறவுள்ளன.
பு. குகனேஸ்வரி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. திருக்குமரன், சிறப்பு விருந்தினராக திருமதி மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-9)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே 30
கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி முகமாலை தெற்கு பதியுறை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகத்துடன் நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பட்டதாரிகள் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளின் முழுமையான தரவுகளைச் சேகரிக்கும் வகையிலும் கலந்தாலோசனையில் ஈடுபடும் முகமாகவும் வடமாகாணம் தழுவியதாக மாவட்ட ரீதியாக ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடலில் அனைத்துப் பட்டதாரிகளையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது,
ஜனாதிபதி செயலாளர் வேலையற்ற பட்டதாரிகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் தகவல்களையும் சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்டிருந்தார்.
அதற்காகவே இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளோம். கிளிநொச்சி மாவட்டத்துக்கான கலந்துரையாடல், வைலஸ் சந்தி, 5 ஆம் கட்டை, கிளிநொச்சியில் உள்ள ஒக்ஸ்போர்ட் தனியார் கல்வி நிறுவனத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்துக்கான கலந்துரையாடல், முல்லைத்தீவு கச்சேரிக்கு முன்பாக உள்ள பற்மின்ரர் உள்ளக விளையாட்டு மைதானத்தில் அதே நாள் மாலை 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 077 3539992 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என்றுள்ளது. (ஓ-25-100)

# ஒலிம்பியாட் போட்டி: வேம்படி மாணவி தெரிவு

கொடிகாமம், மே 30
இவ்வாண்டுக்கான கணித ஒலிம்பியாட் போட்டியில் தொகுதி- II இல் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற வேம்படி மகளிர் கல்லூரியின் தரம் - 8 மாணவி ஹரினியா சசிகரன் சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.



கல்வி அமைச்சினால் மீகொடவில் நடத்தப்பட்ட சர்வதேச கணிதப் போட்டிக்கான தெரிவுப் பரீட்சையில் மூன்றாம் இடம்பெற்று எதிர்வரும் ஜூலை 26 தொடக்கம் 31 ஆம் திகதி வரை லக்னோவில் நடைபெறவுள்ள சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றவுள்ளார். சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டித் தெரிவுக்கான பரீட்சையில் முன்னிலை பெற்ற 8 மாணவர்கள் மட்டுமே லக்னோ செல்லத் தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-25-159)



# தேர்தல் விளையாட்டு மக்களைப் பாதிக்கும்

அநுர காட்டம்

கொழும்பு, மே 30
மக்களின் பிரச்சினைகளுக்கு உண்மையான பதில்களை வழங்கியிருந்தால் நாடு இவ்வாறான தொரு கதியைச் சந்தித்திருக்காது. எனவே ஜனாதிபதித் தேர்தலைத் திட்டமிட்டபடி நடத்தவேண்டும்.
-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் ஐந்து வருட கால அவகாசம் வழங்கவேண்டும் என ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது. அவரால் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதையே அவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நாடு பிச்சை எடுக்க வேண்டிய நாடு அல்ல. மக்களை பட்டினி கிடக்க விரும்புகிறது இந்த அரசாங்கம். எனவே நாட்டைக் கட்டியெழுப்ப தேர்தலை ஒத்திவைக்கும் விளையாட்டுகளைவிட [illegible] என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# புகைப்பொருள் எதிர்ப்புதினம்

யாழ்ப்பாணம், மே 30
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில், சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புதினம் சங்கானைப் பேருந்து நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஓ-25-125)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். பணம் கேட்டு நச்சரிப்பார்கள். பிணக்குகள் நீங்கும்.

**இடபம்:** உறவினர்கள் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும். சிவபெருமானை வழிபடுவது சிறப்பு.விற்பனையும் லாபமும் கூடுதலாக இருக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வீண் அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். விநாயகரை வழிபடுவது நற்பலன்களை அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சில சிரமங்கள் ஏற்படும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். பேசும்போது பதற்றம் தவிர்ப்பது அவசியம். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். காரியம் சாதகமாக முடியும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மனஸ்தாபம் நீங்கும். உற்சாகம் ஏற்படும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்யவேண்டாம்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சற்று அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனவருத்தங்கள் நீங்கும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**மீனம்:** மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மகிழ்ச்சி உண்டாகும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உடல் ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் செலுத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுபானசாலை அனுமதி நிறுத்துமாறு போராட்டம்

பிரபல்யமான பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள், நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என்பனவற்றுக்கு அண்மையாக மதுபானசாலை சட்டவிரோதமாக இயங்கி வருவதாகவும் இதனால் பல சமூகப்புரள்வான நடவடிக்கைகள் இடம்பெறும் நிலையில் அந்த மதுபானசாலைக்கு அனுமதியை வழங்கக் கூடாது எனத் தெரிவித்து நேற்றுமுன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஊர்காவற்றுறை சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஒ-125)

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 • 10 • 1949



இறப்பு 28 • 05 • 2024

## துரைராசா கந்தசுவாமி

வாகையடி வீதி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வேலாயுதம் வீதி நுணாவில் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட துரைராசா கந்தசுவாமி அவர்கள் நேற்றுமுன்தினம் (28.05.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா - பாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், நளாயினியின் அன்புக் கணவரும், மேனகா (லண்டன்), அகீபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லவேந்திரா (லண்டன்), அனிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தேனுகா, வருண் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், பவளராணி, யோகராணி, தர்மரத்தினம், ஜெயராணி, அமிர்தராணி, பாக்கியதுரை, அற்புதராணி, மகாதேவா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் பாலசிங்கம், கமலாதேவி, அமிர்தலிங்கம், சிவகுமார், ஈஸ்வரி, ஜெகதீஸ்வரன், இந்துமதி, சரவணபவன், கமலேந்திரன், மணிவாசன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், வாசுகி, ஜெயரஞ்சினி, ஞானசுந்தரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
**021 227 0506**

(CR/42528) J-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 • 04 • 1947



மறைவு 01 • 05 • 2024

## அமரர் திருமதி றொசாறியோ ராணி பாக்கியநாதன்

அவர்களின் 31ம் நாள் நினைவு நிகழ்வு நாளை (31.05.2024) வெள்ளிக் கிழமை எமது இலல்லத்தில் நடைபெறும்


அன்னார் இறை பதமடைந்த செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் இரங்கல்களைத் தெரிவித்த யாழ் மற்றும் கொழும்பு மாகாண அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர்கள், குருக்கள், மறை மாவட்டக் குருக்கள், துறவிகள் அனைவருக்கும் எமது நன்றிகள். மேலும் வருகை தந்து அஞ்சலி செலுத்திய டோக்கியோ சிமெந்து நிறுவன முகாமைத்துவப் பணியாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் பணியாளர்கள், கண்டாவளை பிரதேச செயலகப் பணியாளர்கள், சிஹிறி ரூபிங் நிறுவன மற்றும் நிப்போன் பெயிண்ட் நிறுவன அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கும், அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், யா/உடுவில் மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத் திருஅவையினர், பக்திச் சபையினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (31.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் நினைவுத் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெற உள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
**கு. பாக்கியநாதன் (கணவன்)**
**அருட்பணி. கிறிஸ்ரி நிர்மலறாஜன் (அ.ம.தி) - 077 241 8647 (மகன்)**
**கிறிஸ்ரி அருள்றாஜன் - 077 3733 480 (மகன்)**
**கிறிஸ்ரி கருணறாஜன் - 076 2380837 (மகன்)**
**அல்பேட் பிரீஸ் (பிரான்ஸ்) - 0033651850594 (மருமகன்)**
**ஆஞ்சலோ ஞானேஸ்வரன் (கனடா) - 0016474031441 (மருமகன்)**

(CS/605) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் • 24 • 12 • 1942



மறைவு • 29 • 05 • 2024

## மார்ட்டீன்

**(இலங்கை போக்குவரத்து சபை யாழ்ப்பாணம்)**

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட மார்ட்டீன் நேற்று (29.05.2024) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும் விமலாவதி (றஞ்சி), லீலாவதி (சாந்தி), இந்திராவதி (நந்தி), சறோஜினி (மஞ்சுளா), ஜீவராணி (பாப்பா), குமாரரூபசிங்கம் (குமார்-பிரான்ஸ்), சுமதினி (பிள்ளை), டயஸ்ரூபசிங்கம் (தாசன்), டயஸ் ராஜ்குமார் (குட்டித்தம்பி), லங்காறாஜினி (மாலா), சுரேந்தினி (மயுரா) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**புது வீதி**
**கொய்யாத்தோட்டம்**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 603) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியா வடக்கு பிரதேச சபை
## நெடுங்கேணி வரலாற்றுச் சிறப்புமிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பான அறிவித்தல்.

புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 03.06.2024 ஆம் திகதி அன்று இடம்பெறவுள்ளது. குறித்த பொங்கல் விழாவின்போது வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் வருமாறு.

1. உணவுப்பொருட்களைக் கையாளுகின்ற சகல வர்த்தகநிலையங்களும் பிரதேச சபையினது அனுமதியினைப் பெற்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். இதற்காக அனுமதிகளை ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் தற்காலிக பணிமனை யில் பெற்றுக்கொள்ள முடியும்.
2. ஆலயத்திற்கு வருகைதருகின்ற அனைத்துப் பக்தர்களுக்குமான குடிநீர் வசதி, மலசலகூட வசதி, வீதி ஒழுங்கமைப்பு மற்றும் வாகனத் தரிப்பிட வசதி என்பன பிரதேச சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.
3. தரிப்பிடத்தில் நிறுத்தப்படும் வாகனங்களில் மேலதிகமாக பொருத்தப் பட்டுள்ள ஆடம்பரப் பொருட்களுக்கு எமது சபையினால் பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்பதனை கருத்திற் கொள்ளவும். குறிப்பாக (முச்சக்கர வண்டியில் பொருத்தப்படுகின்ற Audio Players மற்றும் Speakers)
4. வாகனங்களில் பாதுகாப்பற்றவகையில் பொருத்தப்பட்டுள்ள பற்றறிகள் திருட்டுப் போகாதவகையில் அவற்றை பாதுகாப்பதற்கு ஏதுவான வழி முறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
5. பொதுமக்கள் தமது பெறுமதி மிக்க ஆபரணங்கள் திருட்டுப் போகாத வகையில் தங்களது சொத்துக்களை பாதுகாப்பதற்குரிய வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சோ.மணிவண்ணன்,**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி.**
**29.05.2024**

(CR/42527) J-1

# சாவகச்சேரி விபத்தில் நான்கு பேர் காயம்

யாழ்ப்பாணம், மே 30
கனரக வாகனத்துடன் முச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளா னதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அருகாமையில் ஏ- 9 வீதியில் இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 12.45 மணிய ளவில் இடம்பெற்றுள்ளது. கனரக வாக னத்தை பின்நோக்கித் திருப்பும்போது இந்த விபத்து நடந்துள்ளது. கனரக வாக னத்தின் பின்னால் வந்த முச்சக்கர வண்டி அதனுடன் மோதுண்டுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டிச் சாரதி மற்றும் அதில் பயணித்த மூவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவம னையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-27)

**நாஹா மருத்துவ நிலையம்**
மூட்டுதேய்வு, மூட்டுக்கள் விலத்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, கை, கால் செயலிழப்பு, தீராத புண்கள், அல்சர், நீரிழிவு
- விசேட மருந்தியல்
ஜெகபதிவீடு
சாத்தாவத்தை
வைரவர் கோயிலடி,
மானிப்பாய்.
**T.P. 077 321 2740**
(CS/55214) J-1

## தொழிற்சந்தை

மனிதவலு மற்றும் வேலைவாய்ப் புத் திணைக்களத்தின் நிதி அனுச ரணையுடன், தெல்லிப்பழைப் பிரதேச செயல கத்துக்குட் பட்ட வேலை யற்ற இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு தொழில் வாய்ப் பினைப் பெற் றுக் கொடுக்கும் நோக்குடன் முன்னெடுக்கும் தொழிற்சந்தை நிகழ்வு தெல் லிப்பழைப் பிர தேச செயலகத் தில் நாளை வெள்ளிக்கி ழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது.
(எ-25-66)

## Chundikuli Girls' College

### VACANCIES

Applications are invited from suitable candidates for the below vacancies.

1. Teacher of Combined Mathematics for A/L English medium classes.
2. Teacher of Hindu Civilization for A/L Classes.
3. Teacher of Accounting for A/L English medium classes

Applications close on 10.06.2024. Only short listed candidates will be called for an interview.

Principal

Postal Address :- 6, Colombogam road,
Chundikuli, Jaffna.
Email :- forwardege@yahoo.com

(CR/42510) J-1

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 14. கஸ்தூரியார் வீதி. ஆதன இல-278A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் K.ஆறுமுகம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். இல-276. கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பொன்னு பழனிச்சாமி அவர்கள் 20.03.2014ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் 5355ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனமானது தனது தகப்பனாராலும் அவரது முன்னோர்களாலும் கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக சொந்தமும் நிந்தமுமாக ஆட்சிசெய்து வந்து பின் 1960ம் ஆண்டளவில் தனக்கு நன்கொடை உறுதி மூலம் எழுதிக் கொடுக்கப்பட்டதாகவும். கடந்தகால வன்செயல்களின்போது உறுதி தொலைந்து விட்டதென்றும் காணிப்பதிவுத் திணைக்களத்தில் தேடுதல் செய்தும் மீளப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்றும், கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தன்து சொந்தமும் நிந்தமுமாக ஆட்சிசெய்து வருகிறேன் என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம். இல-276. கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பொன்னு பழனிச்சாமி அவர்கள் 12.12.2014ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் 5791ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம். கொட்டடி வெள்ளாந்தெரு. இல-90/6. கமால் வீதியைச் சேர்ந்த தனது மருமகளான பழனிச்சாமி நாகராஜா பெண் விக்கினேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வண்ணார்பண்ணைப் பகுதி வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை, யாழ்ப்பாணம் மாநகர சபை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், பெரியகடைப் பகுதி, கி.சே.பிரிவு-ஜே/80, "நாவலடியும் புளியடியும்" எனும் பெயருடைய ஆதனத்தில் அமைந்துள்ள கடைக்கட்டடம் இதன் நீளம் பதினைந்து (15) அடி அகலம் பன்னிரண்டு (12) அடியுமான நூற்றியெண்பது சதுர அடி விஸ்தீரணம் கொண்டது.

இதற்கு எல்லைகள்,

கிழக்கு :- குளம்.
வடக்கு :- கந்தையா ஆறுமுகத்தின் ஆதனம்.
மேற்கு :- கஸ்தூரியார் வீதி.
தெற்கு - தம்பு குமாரசாமியின் ஆதனமும் ஒழுங்கையும், இதடங்கலும்.


தற்போது பழனிச்சாமி நாகராஜா பெண் விக்கினேஸ்வரி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது பழனிச்சாமி நாகராஜா பெண் விக்கினேஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்.**
**யாழ் மாநகர சபை.**

(CS/42526) J-1

## மரண அறிவித்தல்

மண்ணில்
04 . 03 . 1932



விண்ணில்
26 . 05 . 2024

### தம்பையா அன்னம்மா

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல. 62 மணல் தரை வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா அன்னம்மா அவர்கள் கடந்த 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, விசாலாட்சி, தியாகராஜா, பூங்காவனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், தர்மலிங்கம், இரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், லோகநாதன், மலர்விழி, கயல்விழி, ரகுநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜினி, ஸ்ரீகந்தராசா (அருள்), பரமானந்தம், வனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், மதிநாத், சுஜித்தா, ரபித்தா, சதீஸ் - திவ்வியா, சுஜீத், சுஜீபா - காந்தரூபன், சுகந் - நிஷாயினி, துஷானி, பிரவீன், டுசிக்கா, தர்மிகன், கிரிதரன், கிரிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இஷா, ஆருஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
**021 222 6561**
**077 446 9014**

(CS/55210) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் சிக்கிய பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 30

கணவருடன் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் கார் மோதி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்த சரோஜினிதேவி அல்பேர்ட் வில்லியம் (வயது-61) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் சுகவீனம் ஏற்பட்டதை அடுத்து கணவர் சைக்கிளில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு மருந்து எடுத்துவிட்டு வீடு திரும்பும்போது பின்னால் வந்த கார் ஒன்று சைக்கிளை மோதியுள்ளது. அதில் சைக்கிளில் முன் இருந்து பயணித்த மனைவி தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

இவர் தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (எ-26)



# குத்துச்சண்டைப் போட்டியில் முல்லைப் பெண்கள் சாதனை

வட மாகாண பெண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் 5 நிறைப்பிரிவுகளில் தங்கம் வென்று முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணி முதலாம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளது.

பெண்கள் அணியில் 5 தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம், 3 வெண்கலப் பதக்கங்கள் பெற்று முல்லைத்தீவு மாவட்டம் முதல் இடத்தையும், 3 வெள்ளிப் பதக்கங்கள், இரு வெண்கலப் பதக்கங்கள் பெற்று வவுனியா மாவட்டம் இரண்டாம் இடத்தையும் ஒரு வெண்கலப் பதக்கம் பெற்று கிளிநொச்சி மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

சாதனை படைத்த பெண்களை பாராட்டும் நிகழ்வில் வடமாகாண விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதானந்த், மாவட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் கே.சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-25-19)

## நான்காம் ஆண்டு நினைவு



பிறப்பு
12.10.1944

இறப்பு
30.05.2020

(கல்லடி - கன்னாதிட்டி வீதி, தருமபுரம்)

**அமரர் நடராஜா சுரேந்திரன்**

(ஆங்கில மொழிபெயர்ப்பாளர்)

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
நான்கு ஆண்டுகள் சென்றுவிட்டன
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
காலன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

(CS/604) J-1

என்றும் உங்களின் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

சு. புஸ்பராணி - (மனைவி - 076 663 5996)
சு.விவேகரமணன் - (பிரான்ஸ் - 0033 624 039 679)
சு.வித்தியாரமணன் - (UK - 0044 749 518 6321)
கி.விஜயகாயத்திரி - (கனடா - 001 613 612 3121

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி பரமேஸ்வரி ஆறுமுகானந்தன்**



அன்னையின் மடியில்
08.08.1951

ஆண்டவன் அடியில்
11.06.2023

திதி: அட்டமி (30.05.2024) வியாழக்கிழமை



அன்புடனே எமை வளர்த்து அறிவூட்டி
பண்புடனே பாசமழை பொழிந்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
எம்முடன் வாழாமல் இறையடி சேர்ந்தனையே!
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்!!

எமது குடும்பத் தலைவியின் முதலாம் ஆண்டு நினைவு ஆராதனை இன்று (30.05.2024) வியாழக்கிழமை அச்சுவேலியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. நினைவு ஆராதனையிலும் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

"சிவகமலகம்"
சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதந்திகளை நம்பாதீர்கள்

## வீரமாகாளி அம்பாள் ஆலய பிரதம குரு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 30

அம்பாளின் ஆலயத்தில் குழப்பம் விளைவித்து, நீதிமன்றத்தில் ஏற்றுக்கொண்ட நால்வர் மட்டும் அம்பாளுக்குத் தொண்டு செய்யத் தகுதி அற்றவர்கள் என வண்ணை வீரமாகாளி அம்பாள் ஆலய முதன்மை பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமாகிய ராஜா ஸ்ரீ சிவ கமல் ராஜ குருக்கள் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஆலய மஹோற்சவம் ஆரம்பமாகிய நிலையில், அந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வருடம் ஆலய மஹோற்சவம் இடம்பெறவிருந்த நிலையில், சிலர் ஆலயத்தின் வசந்த மண்டபத்தை மூடி, பூசை வழிபாடுகளை இடம்பெறவிடாமல் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன் எனது மகனின் பூணூலை அறுத்தனர். அவர்களுக்கெதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. குறித்த வழக்கில் அவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு நீதிமன்றம் ஊடாக இழப்பீடு வழங்கிய நிலையில் வழக்கு முடிவுக்கு வந்தது. இம்முறை அம்பாளின் மஹோற்சவம் ஆரம்பமாகியுள்ள நிலையில், நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட குறித்த நான்கு பேரும் ஆலயத்துக்குள் அம்பாளுக்குரிய தொண்டுகளை ஆற்ற முடியாது எனத் தெரிவித்திருந்தேன்.

ஆனால், இந்தத் தகவலை சிலர் மாற்றி, ஆலய பிரதம குரு நீதிமன்றத்தில், எவரும் அம்பாளுக்குரிய பணிவிடைகளைச் செய்யக்கூடாது எனக் கூறியதாக தவறான பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை நான் முற்றாக மறுக்கிறேன். அம்பாளுக்கு இதுவரை காலமும் தொண்டாற்றியவர்கள் தமது பணியைச் செய்யமுடியும்.

நான் கூறிய நான்கு பேர் மட்டும் அம்பாளுக்குத் தொண்டு செய்யத் தகுதியற்றவர்கள். ஆகவே, ஒவ்வொரு வருடமும் மஹோற்சவத்தில் அம்பாளுக்குத் தொண்டு செய்யும் அடியவர்கள் ஆலயத்தில் தொண்டில் ஈடுபட முடியும் - என்றார். (ப-20)



# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடக்கும்

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

**ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்பதை ஜனாதிபதி அமைச்சரவைக்கும் தெளிவுபடுத்தியுள்ளார். அரசமைப்பின் பிரகாரம் அத்தேர்தல் நடத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது அடுத்து என்ன தேர்தல் என்பது பற்றி தெளிவில்லாத நிலைமை காணப்படுகின்றது. தேர்தல் பற்றி அமைச்சரவையில் ஏதேனும் கலந்துரையாடப்பட்டதா என அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

'இம்முறை அல்ல கடந்தமுறை அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்பதை ஜனாதிபதி தெரிவித்தார். அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்பது உறுதி - என்றார். (ஓ-44)

# புதையல்தோண்டிய இடத்தில் அகழ்வுப் பணி முன்னெடுப்பு

பேசாலை முருகன் கோவிலடியிலுள்ள காட்டுப் பிரதேசத் தினுள் நேற்றுமுன்தினம் காலை அடையாளம் காணப்பட்ட இடத்தில் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அகழ்வு நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை. பேசாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முருகன் கோவிலடியிலுள்ள காட்டுப் பிரதேசத்தினுள் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கடற்படை அதிகாரி ஒருவர் உள்ளடங்கலாக 8 பேர் கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் இடத்தில் அகழ்வுப் பணியை முன்னெடுக்க பேசாலை பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கு நீதிவான் அனுமதியளித்தார். அதற்கு அமைவாக அகழ்வுப்பணி முன்னெடுக்கப் பட்டது. ஆனாலும் எந்தப் பொருள்களும் அங்கிருந்து மீட்கப் படவில்லை. (ஓ-56)


## கண்ணீர் அஞ்சலி

### தியாகராசா செல்வராணி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி M.ஜெயரஜனி அவர்களின் அன்புத் தாய் தியாகராசா செல்வராணி அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திகின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.


## வீரமாகாளி அம்மன் ஆலய வழக்கு:

# யாழ். மாவட்ட நீதிமன்றிலிருந்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றுக்கு

## மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளை

கொழும்பு, மே 30

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம் தொடர்பில் யாழ். மாவட்ட நீதிமன்றின் முன் இருக்கும் வழக்கை மல்லாகம் மாவட்ட நீதிமன்றுக்கு மாற்றி மேன் முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

சண்முகநாதன் சற்குணமூர்த்தி உட்பட 9 வழக்காளிகள், நடராசக் குருக்கள் சண்முகரத்தின ஐயருக்கும், சிவசுப்பிர மணிய குருக்கள் கமல்ராஜ் குருக்களுக்கும் மற்றும் 4 பேருக்கும் எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கை யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி விசாரிக்கக் கூடாதென யாழ். மாவட்ட நீதிபதியின் முன் முதலாம் மற்றும் இரண்டாம் எதிராளி களால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நடராசா குருக்கள் சண்முக ஐயரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதிமன்ற மாற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதிலேயே மேற்படி கட்டளை வழங்கப் பட்டுள்ளது. (ஓ-இ)


## மரண அறிவித்தல்

### யோசவ் ஜோய் கிறிஸ்ரி
(எடிசன்)



தோற்றம் 10.05.1970
மறைவு 29.05.2024

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட யோசவ் ஜோய் கிறிஸ்ரி (எடிசன்) நேற்று (29.05.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசவ், ஜேர்மனியில் வசிக்கும் எட்வீனம்மா (பேபி) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சந்திரகலாவின் அன்புக் கணவரும், பவினியின் பாச மிகு தந்தையும், எல்சி (ஜேர்மனி), எட்மன் (கனடா), எவாறஸ், ஜெனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரவதனா (பிரான்ஸ்), அன்ரன் (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (30.05.2024) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 613IS-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பத்நுவர...

மீளக் கோரப்படும்போது இந்த நிதி வழங்கப்படும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

பாடசாலை உள்ளக வலையமைப்பை உருவாக்குவதற்கான 3 ஆம் கட்ட நிதி முல்லைத்தீவு, சம்பத்நுவர பாடசாலைக்கு வழங்கப்படவில்லை. 4 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த நிதி 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கல்வி அமைச்சால் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிதி பயன்படுத்தப்படாமை தொடர்பாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் விளக்கம் கோரியுள்ளார். வடக்கு மாகாண பிரதம செயலர், வடக்கு ஆளுநர் ஆகியோரும் இது தொடர்பில் விளக்கம் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பத்நுவர பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்வி அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்ட போதும், அவர்கள் கருத்துத் தெரிவிக்க மறுத்தனர். வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் இது தொடர்பாக கேட்டறியுமாறு பதிலளித்தனர். (அ-எ-125)

## அரசியல்...

இதனால் 'அனுமதிக்கப்படவில்லை, அரசியல் பேசுதல்' என்ற பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்ட நிலையில் நிகழ்வு நடைபெற்றது.

தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பொது நூலகத்தின் 'கதையின் ஏரியும் நினைவுகள்' என்னும் ஆவணப்படத் திரையிடலும் கலந்துரையாடலும் யாழ்ப்பாண பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதனை சோமீதரன் இயக்கியிருந்தார். 2007 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த ஆவணப்படத்தை, யாழ்.நூலகத்தில் திரையிட எடுத்த பல முயற்சிகள் கடந்த காலங்களில் கைகூடாத நிலையில், சுமார் 17 வருடங்களின் பின்னர் அதனை யாழ்.நூலகத்தில் திரையிட அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் குறித்த நிகழ்வில் எவரும் அரசியல் பேசமாட்டார்கள் என்பதை நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் எழுத்துவடிவில் உறுதிப்படுத்த வேண்டுமெனக் கோரப்பட்டது. அத்தகையை கடிதத்தை நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் வழங்கிய பின்னரே திரையிடலுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் நேற்று நடைபெற்ற ஆவணத்திரையிடலில் ' அனுமதிக்கப்படவில்லை, அரசியல் பேசுதல்' என்ற பதாகைகள் பெரிதாகக் காட்சிப்படுத்தப்பட்டதால், அவைபலரது கவனத்தையும் ஈர்த்தன. (அ-20)

## கடற்படை...

யாழ்ப்பாணம், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள காட்டுப்புலம் கடற்படை முகாம் அமைந்துள்ள காணிகளை நிரந்தரமாகக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. கடந்த காலங்களில் இவ்வாறான முயற்சிகள் பொதுமக்களினதும், காணி உரிமையாளர்களினதும் கடும் எதிர்ப்பை அடுத்து தடைப்பட்டிருந்தன.

தற்போது மீண்டும் அந்தக் காணிகளைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்று காலை 9 மணிக்கு காணி அளவீட்டு நடவடிக்கைக்காக நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அங்கு வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தகவலை பிரதேச செயலரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

காணி கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராக இன்று காலை பொதுமக்களும், அரசியல் கட்சிகளும், அந்தப் பகுதி சமூக மட்ட அமைப்புகளும் இணைந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-எ-125-66-100)

## மாணவிகளிடம்...

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையொன்றில் ஆசிரியராகப் பணிபுரிபவருக்கு எதிராக மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் மாணவிகளின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாட்டுக்கு அமைவாக ஆசிரியர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை வழக்கு மீள எடுத்துக்கொள்ளப்பட்டு ஆசிரியருக்கு பிணை வழங்கப்பட்டது.

அவருக்கு எதிராக திணைக்களரீதியான நடவடிக்கை வலிகாமம் கல்விப் பணிமனையால் முன்னெடுக்கப்பட்டது. அதற்கு அமைவான விசாரணை அறிக்கை, கல்வி அமைச்சின் செயலருக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்றைய தினம் காலை குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் பணியைத் தொடர தடைவிதிக்கப்பட்டு மாகாணக் கல்வி அமைச்சின் செயலரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

## குடும்பஸ்தர்...

வடமராட்சி, பருத்தித்துறையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தும்பளை, முத்துமாரியம்மன் கோயிலடியைச் சேர்ந்த 44 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே தவறான முடிவெடுத்து உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா மேற்கொண்டார். (அ-எ-100)

## உயர்தர...

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றிருந்தது. இப் பரீட்சைக்கு 3இலட்சத்து 46ஆயிரத்து 976 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இதேவேளை - 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு பணிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-எ-66)

## மண்காக்க...

தெரிவித்துள்ளார்.

"எமது மக்களுக்குச் சொந்தமான காணிகளைக் கடற்படைக்குச் சுவீகரிப்பதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. எமது மண்ணைக் காக்க இன்று காலை சுழிபுரத்தில் அணிதிரளுமாறு தாயகத்தை நேசிக்கும் அனைவரையும் அன்புரிமையோடு அழைக்கின்றோம்" என்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-5)

## ரணிலின்...

விடுதலைப் புலிகளை அடியோடு அழிக்க முயன்ற ரணிலின் முகவர். பொது வேட்பாளர் கருத்துப் பரிமாற்றம் ஒரு கண்துடைப்பு நாடகம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமந்திரன் அரசாங்கத்தைப் பாதுகாத்துச் செயற்படுபவர். இந்திய, மேற்குலக நாடுகளின் நலன்களின் அடிப்படையில் அந்தத் தரப்புகளுக்காகச் செயற்படும் இலங்கை அரசாங்கத்தின் முகவர். இப்போதும் அவர் அதையே செய்கின்றார். ஓர் அணியில் இருந்து கொண்டு பிரிந்து இருப்பதைப் போன்ற பல்வேறு அணுகு முறைகளைக் கையாள்கின்றார்.

சர்வதேசரீதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாட்டாளர்களைக் கைது செய்து, எதிராகப் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தவர் ரணில். அதனாலேயே அந்த நேரத்தில் தேர்தலைப் புறக்கணிக்கத் தீர்மானிக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவின் உண்மை முகத்தை மறைக்கவே விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை வாக்களிக்காமல் தடுத்தனர் என்று தேசவிரோதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், எம்.ஏ.சுமந்திரனும் பொய்ப் பரப்புரை செய்கின்றனர்.

தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டிருக்காவிட்டால் முள்ளிவாய்க்கால் மண் வரை சென்றிருக்க மாட்டார்கள் - என்றார். (அ-எ-125)

## அரச...

பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் திறக்கப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவாகியுள்ளதை முன்னிட்டு நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மருத்துவத்துறையினர் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தங்களின் சேவையை முன்னெடுத்துவருகின்றனர். அதேபோல சுகாதார அமைச்சின் செலவுகளுக்கே அதிகளவான நிதி தேவைப்படுகிறது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. இடப்பற்றாக்குறை, கட்டட வசதியின்மை, ஆளணிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல சிக்கல்களுக்கு மத்தியிலேயே சேவைகளை வழங்கவேண்டியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மருத்துவமனையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். குறைகள் உரியவாறு சுட்டிக்காட்டப்பட வேண்டும். அந்த விடயங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுதவறுகள்திருத்தப்படவேண்டும். ஊடகங்களும் எங்களுடன் இணைந்து பொதுமக்களுக்கான சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும் - என்றார். (எ-26-66-125)

## கல்விச்...

அதிபர்கள், ஆசிரியர்கள் இன்றும், நாளையும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தகவல் வெளியாகியிருக்கும் பின்னணியில் கல்வி அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள் ஆசிரியர்கள் சுகவீன விடுப்பு அறிவித்து, நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆயினும் இலங்கை ஆசிரியர் சங்கம் அதை மறுத்திருந்திருந்தது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் ஆ.தீபன் திலீசன் தெரிவித்ததாவது:-

30 மற்றும் 31 ஆம் திகதிகளில் ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கப் போராட்டம் எனப் போலி விளம்பரம் ஒன்று உலா வருகிறது. இப்படியொரு போராட்டம் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்படவில்லை.

எதிர்காலத்தில் ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்கப் போராட்டங்களில் நம்பிக்கை இழக்கச் செய்வதற்காக அரசாங்கத் தரப்பால் மேற்கொள்ளப்படும் சதி நடவடிக்கையே இது - என்றார். (அ-எ-66)

## விகாரை...

கட்டடம் ஒன்றுக்கான அடிக்கலையும் நட்டுள்ளார்.

அதேவேளை, கம்பிலிவெவ சிங்களக் குடியேற்றக் கிராமத்துக்கும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்காக 19 இலட்சம் ரூபா நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனால் அண்மையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-110)

## மின்சாரக்...

இந்த ஆண்டின் இரண்டாவது மின் கட்டணத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவு எதிர்வரும் முதலாம் திகதி மின்சாரசபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ள மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலம், மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களின் தேவைக்கு ஏற்பவே மின்சாரசபையின் தற்போதைய நிர்வாகம் செயற்பட்டு வருகின்றது - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறியது உண்மை



## ஏற்றுக்கொண்டார் நவாஸ்

**இஸ்லாமபாத், மே 30**

**இந்தியாவுடனான அமைதி ஒப்பந்தத்தை பாகிஸ்தான் நிராகரித்தது என்பதை பாகிஸ்தான் ஆளும் கட்சியின் தலைவரான நவாஸ் ஷெரீப் ஏற்றுக்கொண்டுள்ளார்.**

1998ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணுவாயுத சோதனையை மேற்கொண்டது. இதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் கடும் கண்டனத்தைத் தெரிவித்தன. இதைத் தொடர்ந்து அப்போதைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுக்குச் சென்று அமைதி ஒப்பந்தம் மேற்கொண்டார். அந்த ஒப்பந்தம் 1999ஆம் ஆண்டு பாகிஸ்தானால் மீறப்பட்டது. இதையே பாகிஸ்தானின் ஆளும்கட்சிக் கூட்டத்தில் நவாஸ் ஷெரீப் ஏற்றுக்கொண்டுள்ளார். அப்போதைய அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன், அணு ஆயுத சோதனையை நிறுத்துமாறும் அதற்காக 5 பில்லியன் டொலர் வழங்குவதாகவும் கோரியிருந்தார். ஆனால் நான் அதை மறுத்தேன். எனது இடத்தில் இம்ரான் கான் இருந்திருந்தால் ஏற்றுக்கொண்டிருப்பார் என்றும் நவாஸ் ஷெரீப் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# நிதி நெருக்கடியில் டொனால்ட் ட்ரம்ப்!

வொஷிங்டன், மே 30

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய ஜனாதிபதி வேட்பாளருமான ட்ரம்ப், பெரும் நிதி நெருக்கடியில் சிக்கி யுள்ளார் என்றும், சொத்துகளை விற்று வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப் மீது ஏகப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. பல வழக்குகளில் அவர் அபராதங்களையும், இழப்பீடுகளையும் செலுத்த வேண்டியிருக்கின்றது. இந்த நிலையிலேயே, இந்த நிதி நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க தனது சொத்துகளை அவர் விற்று வருகின்றார் என்று வொஷிங்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 10 மில்லியன் டொலர் மதிப்புடைய தனது செஸ்னா ஜெட் விமானத்தை ஈரானியஅமெரிக்க கட்டுமான மற்றும் மேம்பாட்டுநிறுவனத்தின் தலைவரான மெஹர்தாத் மொயதியிடம் ட்ரம்ப் விற்பனை செய்துள்ளார் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ம)

## பிணை நீடிப்பு விவகாரம்

# கெஜ்ரிவாலின் கோரிக்கையை நிராகரித்தது உச்சநீதிமன்றம்!

மதுக்கொள்கை விவகாரத்தில், தனக்கு பிணை நீடிப்பு வழங்க வேண்டும் என்ற புதுடில்லியின் முதல்வர் அரவிந் கெஜ்ரிவாலின் கோரிக்கையை அவசர வழக்காக விசாரிப்ப தற்கு உச்ச நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

மதுக்கொள்கை வழக்கில் கைது செய்யப்பட்டிருந்த கெஜ்ரிவால் கடந்த 10ஆம் திகதிபிணையில்விடுவிக்கப்பட்டிருந்தார். ஜூன் மாதம் முதலாம் திகதிவரை அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது. ஜூன் மாதம் முதலாம் திகதி அவர் பொலிஸ் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ சரணையவேண்டும் என்பதே நிபந்தனையாக விதிக்கப்பட்டிருந் தது.

இந்த நிலையில், தனக்கு வழங்கப்பட்ட பிணையை மேலும் சில நாள்களுக்கு நீடிக்க வேண்டும் என்று முதல் வர் கெஜ்ரிவால் தற்போது கோரியுள்ளார். இந்தப் பிணை நீடிப்பு வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று கெஜ்ரிவாலின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் முன்வைத்த கோரிக்கையை ஏற்பதற்கு உச்ச நீதிமன்றம் மறுத்துள்ளது.

பிணை நீடிப்பு வழங்கப்படாத பட்சத்தில் ஜூன் முதலாம் திகதி கெஜ்ரிவால் சிறை செல்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/35110) 3-1

074 173 7684

**இணைந்த கணிதம் - A/L**

35 வருடங்களுக்கு மேல் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும். (CS/55217) 1-1

தொடர்பு:- 076 057 3384

**வீட்டுப் பணிப் பெண் தேவை**

யாழ் நகரில் உள்ள வீடு ஒன்றில் வீட்டு வேலை செய்வதற்கு உகந்த பணிப் பெண் தேவை.

தொடர்பு : 077-3083007

**வேலை ஆட்கள் தேவை**

பருத்தித்துறை வீதி கட்டப்பிராயில் இயங்கும் (பெண் நிர்வாக இயக்குநர்) சுப்பர்மார்க்கற்றிற்கு பெண்கள் வேலைக்கு தேவை

தொடர்புகளுக்கு: 076 320 1987

**காசாளர் உடன் தேவை**

யாழ். நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்திற்கு காசாளர் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 074-2292107
021 -2214479

**NEC**
யாழ் நகர்
A/L-2026
கலை வர்த்தகம் ஆரம்பம்
JUNE 01
சனிக்கிழமை காலை 08.00 மணி
மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்வதற்காக இம்மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது
அலுவலக தொடர்பு: 076 535 0999

**பொருட்கள் விற்பனைக்கு**

சுப்பமார்க்கட் இறாக்கைகள், குளிர்சாதனப் பெட்டி, மற்றும் A/C யுடன் இதர பொருட்களும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 076 320 1987

**வேலையாட்கள் தேவை**

பல்கலைக்கழகத்தை அண்டிய மென்பான விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. (CS/55312) 1-1

தொடர்புகளுக்கு 077 137 1617

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்

A-9 வீதி முகப்புடன் 51 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடி பாதை (18)
- கைதடிச் சந்தி 100M தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

(CS/38) S-1

077-0294164
077-3294130
077-2941521

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி யாழ்ப்பாணம்
A/L 2026 கலை வர்த்தகம்
ஆரம்பம்
June 01
சனி காலை 8.00 மணி
மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்வதற்காக இம் மாதக்கட்டணம் அறவிடப்படமாட்டாது
அலுவலக தொடர்பு: 077 469 6695


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org